DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET.

**S.C. No. 239/2009**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | P.W.19 |
| Name | : | முனிராஜ் |
| Father's / Husband's Name | : | சின்னபிட்டா |
| Age | : | 66 |
| Religion | : | இந்து |
| Calling | : | வி.ஏ.ஓ. (ஓய்வு) |
| Caste | : | அருந்ததியர் |
| Village | : | ஆசிரியர் நகர் |
| Date | : | 29.07.2019 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் தமிழக அரசு பணியில் கிராம நிர்வாக அலுவலராக 2010 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றேன். 18.02.2000 இல் வாணியம்பாடி தாலுக்காவில் இருந்த பெரியார் குப்பம் கிராம நிர்வாக அலுவலராக பணியிருந்தேன். 18.02.2000 அன்று நான் பணியிலிருந்தபோது சி.பி.சி.ஐ.டி. காவல் ஆய்வாளர் அழைத்ததன் பேரில் வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். காலை சுமார் 11:00 மணியளவில் அங்கு கடற்கரை வேலு என்பவரை சி.பி.சி.ஐ.டி. போலிஸார் விசாரித்தார்கள். அவர் தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் நானும் ஜெயானந்தனும் சாட்சி கையெழுத்து போட்டோம். ஒப்பதல் வாக்குமூலத்தை தொடர்ந்து கடற்கரை வேலு 5 ஆயிரம் மதிப்புள்ள எழுதாத முத்திரை தாள் இரண்டை எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.12**, கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.13** ஆகும். கடற்கரை வேலு போலிஸாரை அழைத்து கொண்டு சென்னை சென்று சரவணன் என்பவரை அடையாளம் காட்டினார். அவரை போலிஸார் கைது செய்தபோது சரவணன் தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை ஆய்வாளர் பதிவுசெய்தார். அதில் நானும் ஜெயானந்தனும் சாட்சி கையெழுத்து போட்டோம். ஐந்தாயிரம் மதிப்புள்ள மூன்று முத்திரை தாள்களை எடுத்துக் கொடுத்தார். அதை

ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். ஒன்று தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. மற்ற இரண்டும் காலியாக இருந்தது. சரவணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.14** ஆகும், கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.15** ஆகும். பின்னர் சரவணனின் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி மாயா என்பவரை அடையாளம் காட்டினார். மேற்படி மாயாவை கைது செய்தனர். அவர் தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததன் அடிப்படையில் நான்கு முத்திரை தாள்கள் கைப்பற்றப்பட்டது.

(ஆவணங்களை சரிபார்த்து எடுப்பதற்காக ஒத்திவைக்கப்படுகின்றது. சாட்சி மீண்டும் ஆஜராக உத்திரவிடப்படுகின்றது.)